winmeen.com

# முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஆகஸ்ட் 2022

ஆகஸ்ட் 01-07

**1. இந்தியாவில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை வேளாண் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது?**

அ. 2

ஆ. 3

**இ. 5 ☑**

ஈ. 10

✓ பதினோராவது வேளாண் கணக்கெடுப்பு (2021–22) சமீபத்தில் நடுவண் உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அவர்களால் தொடங்கப்பட்டது. இந்தியாவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வேளாண் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. திறன்பேசிகள் மற்றும் கையடக்க கணினிகள்கொண்டு தரவுசேகரிப்பு நடத்தப்படுவது இதுவே முதல்முறையாகும். மொத்த விவசாய பரப்பின் அளவு, வகுப்பு வாரியான பங்கீடு, நிலப் பயன்பாடு, குத்தகை, பயிரிடும் முறை என்பன உள்ளிட்ட பல்வேறு அளவீடுகளின்கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட்டு இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

**2. இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலான 'விக்ராந்த்'ஐ கட்டிய கப்பல்கட்டுந்தளம் எது?**

**அ. கொச்சி கப்பல்கட்டுந்தளம் ☑**



ஆ. மசகன் கப்பல்கட்டுந்தளம்

இ. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் & பொறியாளர்கள்

ஈ. ஹிந்துஸ்தான் கப்பல்கட்டுந்தளம்

✓ இந்தியாவின் முதலாவது உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலான, 'விக்ராந்த்' கொச்சின் கப்பல்கட்டுந்தளத்தால் (CSL) கட்டப்பட்டு இந்திய கடற்படைக்கு வழங்கப்பட்டது. கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் உள்ள பொதுத்துறை கப்பல்கட்டுந்தளமான CSL, 76% உள்நாட்டு பாகங்களைக்கொண்டு இந்தக்கப்பலை கட்டியுள்ளது. 'விக்ராந்த்', இந்திய கடற்படையில் இந்திய கடற்படை கப்பலாக (INS) பணியமர்த்தப்படும்.

**3. சர்வதேச புலிகள் நாள் கொண்டாட்டங்களை நடத்திய தடோபா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. சிக்கிம்



**ஆ. மகாராஷ்டிரா ☑**

இ. குஜராத்

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ மகாராஷ்டிர மாநிலத்தின் தடோபா புலிகள் காப்பகம் இந்தியாவில் சர்வதேச புலிகள் நாள் கொண்டாட்டங்களை நடத்தியது. மகாராஷ்டிராவின் சந்திராபூர் வன அகாதெமியில் நடைபெற்ற 2022ஆம் ஆண்டு சர்வதேச புலிகள் நாள் கொண்டாட்டத்தில் நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சர் பூபேந்தர் யாதவ் கலந்து கொண்டார். சர்வதேச புலிகள் நாளைக் கொண்டாடுவதற்கான பேரறிவிப்பு கடந்த 2010 ஜூலை.29 அன்று புனித பீட்டர்ஸ்பெர்க்கில் செய்யப்பட்டது.

**4. இந்தியாவில் முதன்முறையாக FIDE செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்திய மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. தெலுங்கானா

இ. மகாராஷ்டிரா

ஈ. ஒடிஸா

✓ 44ஆவது FIDE செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் தமிழ்நாடு அரசால் நடத்தப்படுகிறது. இச்சர்வதேச போட்டியை இந்தியா நடத்துவது இதுவே முதல்முறை. 187 நாடுகளைச் சேர்ந்த செஸ் வீரர்கள் பங்கேற்கும் உலகின் மிகப்பெரிய செஸ் சாம்பியன்ஷிப் போட்டியான இது சென்னைக்கு மிக அருகிலுள்ள மாமல்லபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சர்வதேச நிகழ்வை மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

**5. இந்திய கடற்படையானது அண்மையில் கீழ்க்காணும் எந்த நாட்டிலிருந்து இரண்டு 'MH–60 R' என்ற பன்முக இயக்கங்கொண்ட உலங்குவானூர்திகளைப் பெற்றது?**

அ. ரஷ்யா

**ஆ. அமெரிக்கா ☑**

இ. இஸ்ரேல்

ஈ. பிரான்ஸ்



✓ இந்திய கடற்படையானது சமீபத்தில் அமெரிக்காவிடமிருந்து இரண்டு 'MH–60 R' என்ற பன்முக இயக்கங்கொண்ட உலங்குவானூர்திகளைப் பெற்றது. மூன்றாவது உலங்குவானூர்தி இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு வந்து சேரும். 2019ஆம் ஆண்டில், அமெரிக்கா தனது வெளிநாட்டு இராணுவ விற்பனை (FMS) திட்டத்தின்கீழ் 24 MH–60R பன்முக உலங்குவானூர்திகளை இந்தியாவிற்கு விற்பனை செய்ய ஒப்புதல் அளித்தது. 'MH–60R' என்பது தற்போது பயன்பாட்டில் உள்ள மிகவும் அதிநவீன கடல்சார் பன்முகப்பணிகள் செய்யும் உலங்குவானூர்தி ஆகும்.

**6. கடந்த 2021ஆம் ஆண்டில், அதிகபட்ச சட்டமன்ற அமர்வுகளை நடத்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. ஒடிஸா

ஈ. கர்நாடகா

✓ PRS, சட்டமன்ற ஆராய்ச்சி என்ற மதியுரையகத்தின் அண்மைய ஆய்வின்படி, கேரளாவில் 2021ஆம் ஆண்டில் 61 நாட்கள் என்ற அளவில் அதிகபட்ச சட்டமன்ற அமர்வுகள் நடைபெற்றுள்ளன. 2016 மற்றும் 2019–க்கு இடையில், சராசரியாக 53 நாட்கள் சட்டமன்ற அமர்வுகள் நடத்தப்பட்டு கேரளா முதலிடத்தில் இருந்தது. கேரளாவைத்தொடர்ந்து ஒடிஸா (43 நாட்கள்), கர்நாடகா (40 நாட்கள்), தமிழ்நாடு (34 நாட்கள்) உள்ளன.

**7. அண்மையில் தொடங்கப்பட்ட, 'புதுப்பிக்கப்பட்ட விநியோகப் பிரிவுத் திட்டத்தைச்' செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**

**அ. எரிசக்தி அமைச்சகம் ☑**

ஆ. நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது வழங்கல் அமைச்சகம்

இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

विद्युत मंत्रालय
MINISTRY OF
POWER
सत्यमेव जयते

✓ நடுவண் எரிசக்தி அமைச்சகத்தின், 'புதுப்பிக்கப்பட்ட விநியோகப் பிரிவுத் திட்டத்தைப்' பிரதமர் தொடங்கிவைத்தார். எரிசக்தி விநியோக நிறுவனங்கள் அவற்றின் செயல்பாட்டுத்திறன் மற்றும் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்த உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ₹5200 கோடி மதிப்பிலான NTPCஇன் பல்வேறு பசுமை ஆற்றல் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். தேசிய சூரியசக்தி தளத்தையும் பிரதமர் அப்போது தொடங்கி வைத்தார்

**8. ஒரு புதிய ஊசித்தட்டான் இனம் (*Protosticta anamalaica*) கண்டுபிடிக்கப்பட்ட பீச்சி வனவுயிரிகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு

**ஆ. கேரளா ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. கர்நாடகா

✓ திருச்சூரின் பீச்சி வனவுயிரிகள் சரணாலயத்திலுள்ள மேற்குத்தொடர்ச்சிமலையில், ஆனைமலை நாணல்–வாலி (*Protosticta anamalaica*) என்ற ஒரு புதிய ஊசித்தட்டான் இனத்தை திருவாங்கூர் இயற்கை வரலாற்றுச்சங்கத்தின் பூச்சியியல் வல்லுநர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர். இதன்மூலம், கேரள மாநிலத்தில் உள்ள தும்பி இனங்களின் எண்ணிக்கை 182–ஆக உயர்ந்துள்ளது. மூணாறு நிலப்பரப்பின் பீச்சி வனவுயிரிகள் சரணாலயத்தில் உள்ள பொன்முடி மலையில் இந்தப் பூச்சி முதலில் காணப்பட்டது.

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'Logistics Data Bank' திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?**

அ. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

**ஆ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

இ. MSME அமைச்சகம்

ஈ. கனரக தொழிற்துறை அமைச்சகம்

वाणिज्य एवं
उद्योग मंत्रालय
MINISTRY OF
COMMERCE
AND INDUSTRY
सत्यमेव जयते

✓ NLDSL–NICDC சரக்குப்போக்குவரத்து தரவு வங்கி (LDB) திட்டமானது 50 மில்லியன் EXIM கொள்கலன்களைக் கையாண்டு சாதனை புரிந்துள்ளது. NICDC சரக்குப்போக்குவரத்து தரவு சேவைகளின் இச்சாதனைக்காக நடுவண் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார். National Industrial Corridor Development Corporation என்பதன் சுருக்கந்தான் 'NICDC'. இந்தியாவின் EXIM கொள்கலன் அளவின் 100 சதவீத அளவை LDB கையாளுகிறது. EXIM கொள்கலன் இயக்கத்தின் நிகழ்நேர கண்காணிப்பிற்காக இது இணைய உலகம் (IoT), பெருந்தரவு மற்றும் மேகக்கணினி அடிப்படையிலான தீர்வுமூலம் RFID தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

**10. இந்தியாவின் மிகப்பெரிய நன்னீர் ஏரியான லோக்டாக் ஏரி அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. அஸ்ஸாம்

**ஆ. மணிப்பூர் ☑**

இ. ஹரியானா

ஈ. தெலுங்கானா

✓ மணிப்பூர் மாநிலத்தில் அமைந்துள்ள லோக்டாக் ஏரி இந்தியாவின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும். இந்த ஏரி மணிப்பூரில் அடையாளம் காணப்பட்ட மொத்த ஈரநிலங்களில் 61 சதவீதத்தை உள்ளடக்கியுள்ளது. அண்மையில், லோக்டாக் ஏரியில் உள்ள அனைத்து மிதவை வீடுகள் மற்றும் மீன்பிடி கட்டமைப்புகளை அகற்றுவதற்கான அறிவிப்பை லோக்டாக் ஏரி மேம்பாட்டு ஆணையம் வெளியிட்டது. இது அங்குள்ள மீனவ சமூகம் மற்றும் வீட்டுவிடுதி உரிமையாளர்களிடமிருந்து கடுமையான எதிர்வினையை ஈட்டியுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 11ஆவது வேளாண் கணக்கெடுப்பு தொடக்கம்: அறிதிறன்பேசி, கையடக்க கணினிமூலமாக விவரங்கள் சேகரிப்பு**

பதினோறாவது வேளாண் கணக்கெடுப்பை நடுவண் வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடக்கி வைத்தார். பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தக் கணக்கெடுப்பில் முதன்முறையாக அரிதிறன்பேசி, கையடக்க கணினி ஆகியவை மூலமாக விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

இதுகுறித்து மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2021–22ஆம் ஆண்டுக்கான 11ஆவது வேளாண் கணக்கெடுப்பை நடுவண் அமைச்சர் தொடக்கிவைத்தார். இதற்கான களப்பணிகள் வரும் ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்படவுள்ளன.

இந்தக் கணக்கெடுப்பு நடைமுறையை கடந்த 1970–71ஆம் ஆண்டு முதல் நடுவண் வேளாண் அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. பத்தாவது வேளாண் கணக்கெடுப்பு கடந்த 2015–16ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

---

**2. இந்தியா – ஓமான் கூட்டு இராணுவப்பயிற்சி இராஜஸ்தானில் இன்று தொடக்கம்**

இந்தியா, ஓமான் கூட்டு இராணுவப் பயிற்சியான 'அல் நஜா' நான்காவது பதிப்பு ஆக.1 அன்று இராஜஸ்தான் மாநிலத்தில் தொடங்குகிறது. இந்தப் பயிற்சியில் பங்கேற்கும் ஓமான் நாட்டு பாராசூட் படை வீரர்கள் இந்தியா வந்தடைந்ததாக நடுவண் பாதுகாப்புத்துறை தெரிவித்தது.

புவியியல் ரீதியாக அரபிக்கடலால் இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஓமான் நாட்டுடன், வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்சில், அரபு லீக் மற்றும் இந்தியப்பெருங்கடல் ரிம் கூட்டமைப்பு உள்ளிட்டவற்றில் இணைந்திருப்ப –தோடு வர்த்தகம் மற்றும் இராணுவ ஒப்பந்தங்களில் இருநாடுகளும் கையெப்பமிட்டுள்ளன. சுமார் 4 பில்லியன் டாலர் அளவிற்கு இருதரப்பு வர்த்தம் நடைபெற்ற வருகிறது.

கடந்த 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஒப்பந்தங்களையொட்டி, இந்தியா–ஓமான் நாடுகளுக்கிடை –யே 'அல் நஜா' என்ற கூட்டு இராணுவப்பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்த அல் நஜாவின் நான்காவது பதிப்பு ஆக.1–ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை இராஜஸ்தான் மாநிலத்தில் வெளிநாட்டுப் பயிற்சி முனையான மகாஜன் பீல்ட் பயர் ரேஞ்ச்சில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக ராயல் ஓமான் இராணுவத்தின் பாராசூட் படையைச் சேர்ந்த 60 வீரர்கள் இந்தியா வந்துள்ளனர். இந்திய ராணுவத்தின் சார்பாக 18ஆவது போர் வாகன காலாட்படையைச் சேர்ந்த வீரர்கள் குழு இதில் கலந்துகொள்ளுகிறது.

தீவிரவாத எதிர்தாக்குதல் நடவடிக்கைகள், பிராந்திய பாதுகாப்பு செயல்பாடுகள் மற்றும் அமைதியை நிலைநிறுத்தும் நடவடிக்கைகளுடன் உடற்தகுதி பயிற்சி, செயல்முறை மற்றும் நடைமுறைகளில் இந்தக் கூட்டுப் பயிற்சிகளில் கவனஞ்செலுத்தப்படுகிறது.

---

**1. தேசிய பங்குச்சந்தையின் (NSE) புதிய MD மற்றும் CEO–ஆக நியமிக்கப்பட்டவர் யார்?**



**அ. ஆஷிஷ் சௌகான் ☑**

ஆ. K V காமத்

இ. உர்ஜித் படேல்

ஈ. அருந்ததி பட்டாச்சார்யா

✓ தேசிய பங்குச்சந்தையின் (NSE) புதிய MD மற்றும் CEO–ஆக ஆஷிஷ் சௌஹானை சந்தை ஒழுங்காற்றுநரான SEBI நியமித்துள்ளது. ஆஷிஷ் சௌகான் தற்போது மும்பை பங்குச்சந்தையின் (BSE) MD மற்றும் CEOஆக உள்ளார். BSE மற்றும் அதன் துணை நிறுவனமான Central Depository Services Ltd., (CDSL), அவரது தலைமையின்கீழ் வெற்றிகரமான IPO–க்களை அறிமுகப்படுத்தியது.

**2. கைவினைக் கிராமத் திட்டம் என்பது எந்த நடுவண் அமைச்சகத்தின் முனைவாகும்?**

அ. நடுவண் கலாச்சார அமைச்சகம்

**ஆ. நடுவண் ஜவுளி அமைச்சகம் ☑**


இ. நடுவண் உள்துறை அமைச்சகம்

ஈ. நடுவண் MSME அமைச்சகம்

✓ கைவினைஞர்களின் நிலைத்த வாழ்வாதாரமாக கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதை, 'தி கிராஃப்ட்ஸ் வில்லேஜ் திட்டம்' நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 'சுற்றுலாவுடன் ஜவுளியை இணைப்பதற்கான' நடுவண் ஜவுளி அமைச்சகத்தின் முனைவாகும். இது கைவினைக் குழுக்களுக்கு உட்கட்டமைப்பு ஆதரவை வழங்குவதன் மூலம் கைவினை மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் எட்டுக் கைவினைக் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

✓ அவை திருப்பதி (ஆந்திர பிரதேசம்), வதாஜ் (குஜராத்), நைனி (உத்தர பிரதேசம்), இரகுராஜ்பூர் (ஒடிசா), அனேகுண்டி (கர்நாடகா), மாமல்லபுரம் (தமிழ்நாடு), தாஜ் கஞ்ச் (உத்தர பிரதேசம்) மற்றும் அமர் (இராஜஸ்தான்) ஆகும்.

**3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'சபஹர் துறைமுகம்' அமைந்துள்ள நாடு எது?**



அ. ஆப்கானிஸ்தான்

ஆ. நேபாளம்

**இ. ஈரான் ☑**

ஈ. கஜகஸ்தான்

✓ சபஹர் துறைமுகம் ஈரானில் அமைந்துள்ள ஓர் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாகும்; இது மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான வணிக போக்குவரத்து மையமாகும். இந்தியாவிற்கும் மத்திய ஆசியாவிற்கும் இடையே சரக்குப்போக்குவரத்தை சிக்கனமாக்குவதற்கான இந்திய தொலைநோக்குத்திட்டமான பன்னாட்டு வடக்கு தெற்கு போக்குவரத்து வழித்தடத்தின் (INSTC) தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் 'சபஹர் நாள்' கொண்டாடப்படுகிறது.

✓ 'சபஹர் நாளை' முன்னிட்டு, நடுவண் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துகள் அமைச்சகம், இந்திய போர்ட்ஸ் குளோபல் லிமிடெட் (IPGL) உடன் இணைந்து, சபஹர் மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கேற்பதற்காக மும்பையில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தது.

**4. இந்தியா–ஓமன் கூட்டு இராணுவப் பயிற்சியான, 'அல் நஜா' நடத்தப்படுகிற மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. இராஜஸ்தான் ☑**

இ. சிக்கிம்

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ இந்திய இராணுவமும் ஓமன் ராயல் ஆர்மியும் இணைந்து சமீபத்தில் இந்தியாவின் இராஜஸ்தானில் 13 நாள் கூட்டு இராணுவப் பயிற்சியை தொடங்கின. இந்தியா–ஓமன் கூட்டு இராணுவப் பயிற்சியின் நான்காவது பதிப்பு, 'அல் நஜா' பயங்கரவாத எதிர்ப்பு, பிராந்திய பாதுகாப்பு மற்றும் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் கவனஞ்செலுத்துகிறது.

**5. இந்தியாவில் குரங்கம்மை நோய் நிலைமையை கண்காணிப்பதற்காக நடுவணரசால் சமீபத்தில் அமைக்கப்பட்ட பணிக்குழுவின் தலைவர் யார்?**

அ. அமிதாப் காந்த்

**ஆ. V K பால் ☑**

இ. மன்சுக் மாண்டவியா

ஈ. பாரதி பவார்



✓ இந்தியாவில் குரங்கம்மை நோயின் தாக்கத்தைக் கண்காணிக்க நடுவணரசு தனிப்படை அமைத்துள்ளது. இது NITI ஆயோக் உறுப்பினர் (சுகாதாரம்) டாக்டர் V K பால் தலைமையில் உள்ளது. இந்தப்பணிக்குழுவில் நடுவண் சுகாதார அமைச்சகம், மருந்து மற்றும் உயிரித் தொழில்நுட்ப செயலாளரும் இடம்பெற்றுள்ளார். நோய் கண்டறிதல் வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் நோய்க்கு எதிரான தடுப்பூசியை ஆராய்வது குறித்து இது அரசுக்கு ஆலோசனை வழங்கும். இந்தியாவில் இதுவரை நான்கு குரங்கம்மை பாதிப்பு (கேரளாவில் மூன்று, தில்லியில் ஒன்று) பதிவாகியுள்ளன.

**6. ஒவ்வோர் ஆண்டும், 'நெல்சன் மண்டேலா நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ. ஜூலை.14

**ஆ. ஜூலை.18 ☑**

இ. ஜூலை.19

ஈ. ஜூலை.25




✓ 'நெல்சன் மண்டேலா நாள்' ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.18ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையானது கடந்த 2009ஆம் ஆண்டில் ஜூலை.18ஆம் தேதியை நெல்சன் மண்டேலா நாளாக அறிவித்தது. தென் ஆப்பிரிக்காவில் முழுமையான மக்களாட்சித் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவர் நெல்சன் மண்டேலா ஆவார்.

**7. தேசிய மின்னாளுகை சேவை வழங்கல் மதிப்பீட்டில் கீழ்க்காணும் எந்த நடுவணமைச்சகத்தின் இணையதளம் முதலிடத்தைப் பிடித்துள்ளது?**

**அ. உள்துறை அமைச்சகம் ☑**

ஆ. கலாச்சார அமைச்சகம்

இ. பாதுகாப்பு அமைச்சகம்

ஈ. நிதி அமைச்சகம்




✓ தேசிய மின்னாளுகை சேவை வழங்கல் மதிப்பீட்டில் உள்துறை அமைச்சகத்தின் இணையதளம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. 2021ஆம் ஆண்டில் அதன் அறிவுப்பங்காளர்களான NASSCOM மற்றும் KPMG உடன் இணைந்து நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை ஆகியவற்றின்மூலம் நடத்தப்பட்ட நடுவணரசின் அமைச்சகங்களின் இணையதளங்களின் சேவை வழங்கல் மதிப்பீட்டில் 'டிஜிட்டல் போலீஸ்' இணையதளம் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

**8. அண்மையில் அமைக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) குறித்த உயரதிகாரம்கொண்ட குழுவின் தலைவர் யார்?**




அ. இரமேஷ் சந்த்

ஆ. அமிதாப் காந்த்

இ. M S சுவாமிநாதன்

**ஈ. சஞ்சை அகர்வால் ☑**

✓ நடுவணரசு முன்னாள் வேளாண்மை துறை செயலாளர் சஞ்சை அகர்வால் தலைமையில் உயரதிகாரம்கொண்ட குழுவை அமைத்துள்ளது. அக்குழுவானது குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) பொறிமுறையை மிகவும் பயனுள்ள மற்றும் வெளிப்படையானதாகக் கருதுகிறது. மூன்று சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்களை அரசாங்கம் ரத்து செய்த எட்டு மாதங்களுக்குப் பிறகு இது அமைக்கப்பட்டது. இக்குழுவில் NITI ஆயோக் உறுப்பினர் இரமேஷ் சந்த் மற்றும் IFFCO, ICAR–இன் பிரதிநிதிகள் மற்றும் கர்நாடகா, ஆந்திரா, சிக்கிம் மற்றும் ஒடிஸாவின் பிரதிநிதிகள் உள்ளனர்.

**9. 'J C டேனியல் விருது' என்பது எந்த மொழியில் திரைத்துறையில் வழங்கப்படும் உயரிய விருதாகும்?**



அ. தமிழ்

**ஆ. மலையாளம் ☑**

இ. மராத்தி

ஈ. கன்னடம்

✓ பிரபல திரைப்பட இயக்குநர் K P குமரனுக்கு கடந்த 2021ஆம் ஆண்டுக்கான 'J C டேனியல் விருது' வழங்கப்பட்டது. இது மலையாள திரைத்துறையின் மிகவுயரிய விருதாகும். கலாசார விவகாரங்கள் துறையின்கீழ் இயங்கும் இலாப நோக்கற்ற நிறுவனமான கேரள மாநில சலசித்ரா அகாதெமியால் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது.

**10. 2021–இல் இந்தியாவுக்குப் பணமனுப்புவதில் முதலிடம் வகிக்கிற நாடு எது?**



அ. ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. சிங்கப்பூர்

ஈ. கனடா

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய ஆய்வின்படி, மொத்தப் பணப்பரிமாற்றத்தில் 23 சதவீத பங்கைக்கொண்டு, இந்தியாவின் பணப்பரிவர்த்தனையின் முதன்மையான நாடாக ஐக்கிய அரபு அமீரகத்தை ஐக்கிய அமெரிக்க நாடுகள் விஞ்சியுள்ளது. 2021ஆம் ஆண்டில் 4.6% வளர்ச்சியுடன் $87 பில்லியன் டாலர்களைப் பெற்றதால், இந்தியா உலகின் மிகப்பெரிய பெறுநராக உள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் அமைகிறது சென்னையின் 2ஆவது விமான நிலையம்**

காஞ்சிபுரம் அருகே பரந்தூரில் சென்னையின் இரண்டாவது விமான நிலையம் அமையவுள்ளது. உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம் அனுமதி அளித்ததும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கும் என்று மத்திய இணை அமைச்சர் வி கே சிங் தெரிவித்தார்.

மேலும், உடான் திட்டத்தின்கீழ் மண்டலங்களை இணைக்கும் வகையில் தமிழ்நாட்டில் நெய்வேலி, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் வேலூர் ஆகிய 4 விமான நிலையங்களை புதுப்பித்து தரமுயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பரந்தூரில் விமான நிலையம் அமைக்க ஏற்கெனவே 4,971 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. சுமார் ₹60 ஆயிரம் கோடியில் விமான நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து 73 கிமீ தொலைவில் அமைந்துள்ள பரந்தூருக்கு 2 மணி நேரத்தில் சென்றுவிடலாம். காஞ்சிபுரத்தில் இருந்து 15 கிமீ சென்னை – பெங்களூரு 6 வழிச்சாலையில் இருந்து 10 கி.மீ. தொலைவில் பரந்தூர் அமைந்துள்ளது.

---

**2. ஜூலை GST வருவாய் ₹1.49 லட்சம் கோடி: தமிழ்நாட்டில் ₹8,449 கோடி வசூல்**

நாட்டில் கடந்த ஜூலை மாத சரக்கு மற்றும் சேவை வரியாக (GST) ₹1,48,995 கோடி வசூலாகியுள்ளது. இதில் தமிழ்நாட்டில் ₹8,449 கோடி GST வசூலானது.

இது தொடர்பாக நடுவண் நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் GST அமல்படுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் GST வசூல் புதிய உச்சத்தை தொட்டது. அந்த மாதம் ₹1,67,540 கோடி GST வசூலானது.

இந்நிலையில், கடந்த ஜூலை மாதம் ₹1,48,995 கோடி GST வசூலானது. இது GST அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து வசூலான இரண்டாவது அதிகபட்ச வருவாய் ஆகும். கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜூலை மாதம் சரக்குகள் இறக்குமதிமூலம் கிடைத்த வருவாய் 48 சதவீதம் அதிகமாகவும், உள்நாட்டு பரிவர்த்தனை (சேவைகள் இறக்குமதி உள்பட) மூலம் கிடைத்த வருவாய் 22 சதவீதம் அதிகமாகவும் இருந்தன.

GST வசூலில் நடுவண் GST, மாநில GST, ஒருங்கிணைந்த GST, செஸ் வரி ஆகியவை அடங்கும். அதன் விவரம் பட்டியலில் வருமாறு: ஜூலை GST ₹1,48,995 கோடி; நடுவண் GST ₹25,751 கோடி; மாநில GST ₹32,807 கோடி; ஒருங்கிணைந்த GST ₹79,518 கோடி (சரக்கு இறக்குமதி மூலம் வசூலான ₹41,420 கோடியும் அடங்கும்)

செஸ் ₹10,920 கோடி (சரக்கு இறக்குமதிமூலம் வசூலான ₹995 கோடியும் அடங்கும்)

**தமிழ்நாட்டில் 34% அதிகரிப்பு:** கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழ்நாட்டில் ₹6,302 கோடி GST வசூலானது. இது நிகழாண்டு ஜூலை மாதம் 34% அதிகரித்து ₹8,449 கோடி (சரக்குகள் இறக்குமதி மீதான GSTஐ சேர்க்காமல்) வசூலாகியுள்ளது. கடந்த ஜூலை மாதம் அதிக GST வசூலான மாநிலங்களில் மகாராட்டிரம், கர்நாடகம், குஜராத்தை தொடர்ந்து தமிழ்நாடு 4ஆவது இடத்தில் உள்ளது.

---

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற ராக்கிகர்கி என்பது எந்த மாநிலத்தில் அமைந்துள்ள ஒரு பழைமையான தலமாகும்?**



**அ. ஹரியானா ☑**

ஆ. குஜராத்

இ. ஒடிஸா

ஈ. பஞ்சாப்

✓ ஹரியானாவின் இராக்கிகர்கியில் அமைந்துள்ள பழங்கால மேடுகள் உட்பட இருபது பாரம்பரிய தலங்கள், 'தேசிய முக்கியத்துவம்' வாய்ந்தவையாக அடையாளங்காணப்பட்டுள்ளன. தில்லியில் உள்ள அனங்டல், ஆந்திர பிரதேச மாநிலத்தின் சிந்தகுந்தாவில் உள்ள பாறை ஓவியம்; லேவில் உள்ள பாறை ஓவிய தளம்; இமாச்சல பிரதேச மாநிலம் காலேஷ்வரம் மகாதேவர் கோவில் உள்ளிட்டவை இவ்வாறு அடையாளங்காணப்பட்ட பிற இடங்களாகும்.

**2. பேரழிவை உண்டாக்கும் ஆயுதம் மற்றும் அவற்றின் விநியோக அமைப்பு (திருத்த) மசோதா – 2022 உடன் தொடர்புடைய அமைச்சகம் எது?**

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

**இ. வெளியுறவு அமைச்சகம் ☑**

ஈ. கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் & நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம்

✓ பேரழிவை உண்டாக்கும் ஆயுதம் மற்றும் அவற்றின் விநியோக முறைமைகள் (சட்டவிரோத நடவடிக்கைகள் தடை) திருத்த மசோதா – 2022'ஐ நாடாளுமன்றம் சமீபத்தில் நிறைவேற்றியது. வெளியுறவு அமைச்சகம் அம்மசோதாவை அறிமுகப்படுத்தியது. இது 2005ஆம் ஆண்டு சட்டத்தை திருத்த விழைகிறது. மேலும், பேரழிவு ஆயுதங்கள் மற்றும் அவற்றின் விநியோகம் தொடர்பான எந்தவொரு தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கும் நிதியுதவி செய்வதில் இருந்து மனிதர்களை அது தடுக்கிறது.

**3. 2022 – காமன்வெல்த் விளையாட்டில் இந்தியாவிற்காக தங்கப்பதக்கம் வென்ற அச்சிந்தா ஷூலியுடன் சார்ந்த விளையாட்டு எது?**




**அ. பளு தூக்குதல் ☑**

ஆ. குத்துச்சண்டை

இ. டேபிள் டென்னிஸ்

ஈ. மட்டைப்பந்து

✓ இருபது வயதான அச்சிந்தா ஷூலி 2022 – காமன்வெல்த் விளையாட்டில் 73 கிலோகிராம் எடை தூக்கும் பிரிவில் இந்தியாவுக்காக தங்கப்பதக்கத்தை வென்றார். அவர் 313 கிலோகிராம் (ஸ்னாட்ச்சில் 143 கிலோ மற்றும் கிளீன் & ஜெர்க்கில் 170 கிலோ) கூட்டு முயற்சியில் முதலிடத்தைப் பெற்றார். முன்னதாக மீராபாய் சானு மற்றும் ஜெர்மி லால்ரினுங்கா ஆகியோர் தங்கப்பதக்கங்களையும், விந்தியாராணி தேவி மற்றும் சங்கேத் சர்கார் ஆகியோர் வெள்ளிப்பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

**4. 'இசுலாமிய பெண்கள் உரிமை நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**



அ. ஜூலை.31

**ஆ. ஆகஸ்ட்.1 ☑**

இ. ஆகஸ்ட்.3

ஈ. ஆகஸ்ட்.5

- ✓ 'முத்தலாக்' விதிக்கு எதிரான சட்டத்தை அமல்படுத்தியதைக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் முதல் தேதி, 'இசுலாமிய பெண்கள் உரிமை நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது. தலாக்–இ–பித்தாத் எனப்படும் முத்தலாக் சட்டவிரோதமானது ஆகும். இந்திய சட்டப்படி குற்றவாளிகளுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

**5. மாணவர்களின் கற்றல் விளைவை மேம்படுத்துவதற்காக NITI ஆயோக் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மாநிலம் எது?**

அ. உத்தரகாண்ட்

**ஆ. அருணாச்சல பிரதேசம் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. மேற்கு வங்காளம்

- ✓ அருணாச்சல பிரதேச மாநில அரசு, மாநிலத்தில் உள்ள 3,000–க்கும் மேற்பட்ட அரசுப்பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் விளைவை மேம்படுத்துவது தொடர்பாக NITI ஆயோக்குடனான ஒரு முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூன்று ஆண்டு கூட்டாண்மையையும் (2022 – 25) இரண்டு இலட்சம் குழந்தைகளைச் சென்றடைவதையும் நோக்கமாகக் கொண்டது. பள்ளிக் கல்வி உருமாற்றத் திட்டமானது மாநிலங்களுக்கான NITI ஆயோக்கின் மேம்பாட்டு ஆதரவு சேவைகள் முனைவின் கீழ் உள்ளது.

**6. BCCI நெறிமுறைகள் அதிகாரி மற்றும் குறைகேள் அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. இரஞ்சன் கோகோய்

**ஆ. வினீத் சரண் ☑**

இ. A K சிக்ரி

ஈ. V K சிங்



- ✓ உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வினீத் சரண், BCCIஇன் நெறிமுறைகள் அதிகாரியாகவும், குறைதீர்ப்பாளராகவும் ஓராண்டாக காலியாக இருந்த இவ்விரட்டைப் பணியிடங்களை நிரப்பியுள்ளார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் நிறைவடைந்த ஒய்வுற்ற நீதியரசர் D K ஜைன் அவர்களைத் தொடர்ந்த வினீத் சரண் இந்தப் பதவிக்கு வந்துள்ளார். ஒடிஸா மாநில உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதியரசரான இவர், கர்நாடகா மற்றும் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நீதியரசராகப் பணியாற்றியுள்ளார்.

**7. அண்மையில் திருகுமான் குறித்த தனது முதல் கணக்கெடுப்பை நடத்திய இந்திய மாநிலம் எது?**

அ. கேரளா

ஆ. கர்நாடகா

**இ. ஆந்திர பிரதேசம் ☑**

ஈ. கோவா



- ✓ ஆந்திர பிரதேச மாநில வனவிலங்குத் துறை, தௌலேசுவரம் மற்றும் யானம் இடையேயான கோதாவரியில் உள்ள தீவுகளில் முதன்முறையாக திருகுமான்களைக் கணக்கெடுக்கும் பணியைத் தொடங்கியுள்ளது. அழிந்துவரும் அவ்வுயிரினங்களைக் காக்க ஒரு பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குவது இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

**8. முழு நில உரிமைகொண்ட முதன்மை துறைமுகமாக மாறிய இந்தியாவின் முதல் துறைமுகம் எது?**

**அ. ஜவஹர்லால் நேரு துறைமுகம், மகாராஷ்டிரா ☑**

ஆ. கொச்சி துறைமுகம், கேரளா

இ. மர்மகோவா துறைமுகம், கோவா

ஈ. காண்ட்லா துறைமுகம், குஜராத்

✓ மகாராஷ்டிர மாநிலத்தின் ஜவகர்லால் நேரு துறைமுகம் இந்தியாவின் முதல் 100 சதவீத நில உரிமைகொண்ட முதன்மை துறைமுகமாக மாறியுள்ளது. அதன் அனைத்து கப்பல்களும் PPP மாதிரியில் இயக்கப்படுகின்றன. JNP, நாட்டின் முன்னணி கொள்கலன் துறைமுகங்களுள் ஒன்றாகும். மேலும் சிறந்த 100 சர்வதேச துறைமுகங்களில் அது 26ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

**9. 2022 – ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 82

ஆ. 85

**இ. 87 ☑**

ஈ. 84



✓ 2022 – ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில், 57 நாடுகளுக்கு எளிதாக அணுகும் வகையில் இந்திய கடவுச்சீட்டு 87ஆவது இடத்தில் உள்ளது. ஜப்பான் 193 நாடுகளுக்கு எளிதாக அணுகும் வகையில் முதல் இடத்தில் உள்ளது. சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா 192 நாடுகளுக்கான எளிதான அணுகலுடன் உலகின் அடுத்த ஆற்றல்வாய்ந்த கடவுச்சீட்டுகளைக் கொண்டுள்ளன. 2020ஆம் ஆண்டில் இந்திய கடவுச்சீட்டு வெறும் 23 இடங்களுக்கு மட்டுமே எளிதாக அணுகும் வகையில் இருந்தது.

**10. சீர்மிகு நகரங்கள் – Smart City Mission திட்டத்தின்கீழ் நிதியைப் பயன்படுத்துவதில் முதலிடம் பிடித்த மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. கர்நாடகா

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்

Smart City
MISSION TRANSFORM-NATION

✓ அரசின் சமீபத்திய தரவுகளின்படி, சீர்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ் நிதியைப் பயன்படுத்திய மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. நடுவணரசால் வெளியிடப்பட்ட ₹4333 கோடியில் தமிழ்நாடு ₹3932 கோடிக்கு மேல் செலவழித்துள்ளது. உத்தர பிரதேச மாநிலம் ₹3142 கோடியில் ₹2699 கோடியைப் பயன்படுத்தி இரண்டாம் இடத்தில் உள்ளது. சீர்மிகு நகரங்கள் திட்டமானது கடந்த 2015 ஜூன்.25 அன்று தொடங்கப்பட்டது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தூய்மைக்கடல், பாதுகாப்பான கடல் இயக்கம். சென்னை மெரினா உட்பட 75 கடற்கரைகள் தூய்மைப்படுத்தப்பட உள்ளன**

தூய்மைக்கடல், பாதுகாப்பான கடல் இயக்கம் என்பது கடற்கரைப் பகுதியை தூய்மையாக்கும் பணியில் குடிமக்கள் 75 நாட்கள் பங்கேற்கும் இயக்கமாகும். இந்த இயக்கம் கடந்த ஜூலை மாதம் 5ஆம் தேதி தொடங்கியது.

நாடு முழுவதும் 75 கடற்கரைகளில் ஒவ்வொரு கிலோமீட்டர் பகுதியிலும் 75 தன்னார்வலர்கள் இந்தத் தூய்மைப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இந்த இயக்கப்பணிகள் சர்வதேச கடலோரத் தூய்மை நாளான வரும் செப்.17ஆம் தேதி நிறைவடையும். அப்போது இந்தியாவிலேயே 75 கடற்கரையில் 7,500 கிமீட்டருக்கும் மேற்பட்ட கடற்கரை பகுதிகளை தூய்மைப்படுத்திய மிகப்பெரிய சாதனையாக இது அமையும். இதற்காக சுமார் ₹10 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 75 கடற்கரைகளில் தமிழ்நாட்டில் உள்ள 8 கடற்கரைகளும் இதில் அடங்கும். தமிழ்நாட்டில், சென்னையில் உள்ள மெரினா, பெசன்ட் நகர், திருவான்மியூர், இராமேஸ்வரம் அருகே மண்டபத்தில் ஆரியமான், பிறப்பன்வலசை, தூத்துக்குடியில் வஉசி, முத்துநகர், முல்லக்காடு, புதுச்சேரியில் காந்தி கடற்கரை ஆகிய கடற்கரைகள் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

**1. 'சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷான் 2.0' என்ற திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?**

அ. சுகாதார அமைச்சகம்

**ஆ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑**

இ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ. பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்

✓ நடுவண் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், 'சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷான் 2.0' என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயற்பாட்டு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டமான இது, 15ஆவது நிதி ஆணைய காலமான 2021–22 முதல் 2025–26 வரை செயல்படுத்துவதற்காக இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள், பருவ மகளிர், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Nationally Determined Contribution' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**



அ. பொருளாதாரம்


**ஆ. பருவநிலை மாற்றம் ☑**

இ. பாதுகாப்பு

ஈ. தொழிற்துறை

✓ பாரிசு ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவின் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பருவநிலை மாற்றம் தொடர்பான ஐநா கட்டமைப்பு மாநாட்டிற்கு (UNFCCC) இந்த NDC–கள் தெரிவிக்கப்படவுள்ளன. இந்தியா கடைசியாக 2015ஆம் ஆண்டு தனது NDC–ஐ சமர்ப்பித்தது. 2030 ஆம் ஆண்டுக்குள் அதன் GDPஇல் 45% வரை $CO_2$ உமிழ்வு தீவிரத்தை குறைக்கவும், 2030ஆம் ஆண்டுக்குள் புதைபடிவமற்ற எரிபொருள் அடிப்படையிலான எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு 50 சதவீதம் வரையிலான ஒட்டுமொத்த நிறுவப்பட்ட மின்னாற்றல் திறனை அடையவும் இந்தியா உறுதிபூண்டுள்ளது.

**3. 'முதலமைச்சர் சம கல்வி நிவாரணம், உதவி மற்றும் மானியம் (சீராக்)' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**



அ. தெலுங்கானா

ஆ. ஆந்திர பிரதேசம்

**இ. ஹரியானா ☑**

ஈ. ஒடிஸா

✓ ஹரியானா மாநில முதலமைச்சர் மனோகர் லால் கட்டார் அண்மையில், 'முதலமைச்சர் சம கல்வி நிவாரணம், உதவி மற்றும் மானியம் (சீராக்)' என்ற திட்டத்தைத்தொடங்கினார். பட்ஜெட் தனியார் பள்ளிகளில் அரசுப்பள்ளிகளின் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவு (EWS) மாணவர்களுக்கு, 'இலவச கல்வி' வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பெற்றோர் ஆண்டு வருமானம் ₹1.8 இலட்சத்துக்கும் குறைவாக உள்ள அரசுப் பள்ளி மாணவர்கள் தனியார் பள்ளிகளில் சேரலாம்.

**4. 2022 ஆகஸ்ட் மாத நிலவரப்படி, இந்தியாவில் எத்தனை ஸ்டார்ட்–அப்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன?**

அ. 25000 ஆ. 50000

**இ. 75000 ☑** ஈ. 1,00,000



✓ 75000 ஸ்டார்ட்–அப் நிறுவனங்களுடன் இந்தியா சாதனை படைத்துள்ளதாக நடுவண் வணிகம் & தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்துள்ளார். தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை (DPIIT) 75,000–க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்–அப்களை அங்கீகரித்துள்ளது. 808 நாட்களில் முதல் பத்தாயிரம் ஸ்டார்ட்–அப்களும், சமீபத்திய பத்தாயிரம் ஸ்டார்ட்–அப்கள் 156 நாட்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**5. இராம்சர் தளங்களாக அறிவிக்கப்பட்ட வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் மற்றும் கூந்தங்குளம் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. ஒடிஸா

இ. கர்நாடகா

ஈ. உத்தரகாண்ட்



✓ இந்தியாவிலிருந்து மேலும் 10 சதுப்பு நிலங்கள் இராம்சர் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த பரப்பளவு 12,50,361 ஹெக்டேர் ஆகும். இதன்மூலம் நாட்டின் மொத்த இராம்சர் தளங்கள் 64 ஆக மாறியுள்ளன. 10 புதிய இராம்சர் தளங்களில் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் மற்றும் கூந்தங்குளம் பறவைகள் சரணாலயம் உட்பட தமிழ்நாட்டில் உள்ள ஆறு தளங்களும், கோவா, கர்நாடகா, மத்திய பிரதேசம் மற்றும் ஒடிசாவில் தலா ஒன்றும் அடங்கும்.

**6. ஒவ்வோர் ஆண்டும், 'உலக செஸ் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ. ஜூலை.20 ☑**

ஆ. ஆகஸ்ட்.20

இ. செப்டம்பர்.20

ஈ. அக்டோபர்.20



✓ உலக சதுரங்க நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.20 அன்று கொண்டாடப்படுகிறது. இது சர்வதேச சதுரங்க நாள் என்றும் அழைக்கப்படுகிறது. 1924ஆம் ஆண்டு இதே நாளில், சர்வதேச செஸ் கூட்டமைப்பு (FIDE) பாரிஸில் நிறுவப்பட்டது. ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது (UNESCO) கடந்த 1966ஆம் ஆண்டில் இந்த நாளைக் கொண்டாடுவதற்கான யோசனையை முன்மொழிந்தது.


**7. 2022 – உலக மூளை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

**அ. Brain Health for all ☑**

ஆ. Brain: The CPU

இ. Brain for Knowledge

ஈ. Knowledge is Brain




✓ உலக மூளை நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.22 அன்று, பொது விழிப்புணர்வை அதிகரிக்கவும், மூளை நலம் தொடர்பான வாதங்களை ஊக்குவிக்கவும் கடைப்பிடிக்கப்படுகிறது. "Brain Health for all" என்பது நடப்பு 2022 ஆம் ஆண்டில் வரும் உலக மூளை நாளுக்கானக் கருப்பொருளாகும். இந்த நாள், உலகளவில் ஐந்து முக்கிய கருப்பொருள்களில் கவனஞ்செலுத்தும். அவை – விழிப்புணர்வு, தடுப்பு, வாதம், கல்வி மற்றும் அணுகல்.

**8. 2023 – ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடம் எது?**

அ. இந்தியா **ஆ. சீனா ☑**

இ. இந்தோனேசியா ஈ. நேபாளம்



- ✓ ஒத்திவைக்கப்பட்ட ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதி முதல் அக்.8ஆம் தேதி வரை சீனாவின் ஹாங்சோவில் நடைபெறும் என்று ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் (OCA) உறுதிப்படுத்தியுள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2022ஆம் ஆண்டு செப்டம்பரில் நடத்த திட்டமிடப்பட்டது; ஆனால் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனாவில் COVID–19 வழக்குகளின் அதிகரிப்பு காரணமாக, 2023ஆம் ஆண்டு வரை ஒத்திவைப்பதாக OCA அறிவித்தது.

**9. 2022இல் நடைபெறும் '13ஆவது பீட்டர்ஸ்பெர்க் காலநிலை பேச்சுவார்த்தை' நடைபெறும் இடம் எது?**

அ. சிகாகோ

**ஆ. பெர்லின் ☑**

இ. நெதர்லாந்து

ஈ. சுவிட்சர்லாந்து



- ✓ 13ஆவது பீட்டர்ஸ்பெர்க் காலநிலை பேச்சுவார்த்தையானது சமீபத்தில் பெர்லினில் தொடங்கியது. இரண்டு நாள் நடைபெறும் இவ்வருடாந்திர காலநிலை அமைச்சர்கள் சந்திப்பிற்கு (COP–27) ஜெர்மனி மற்றும் எகிப்து தலைமை தாங்குகிறது. COP–27–இன் முக்கிய குறிக்கோளான காலநிலை நடவடிக்கையை மேம்படுத்துவதில் உள்ள வேறுபாடுகளைத் களைவதற்கு ஒருமித்த கருத்தை உருவாக்கவும், அரசியல் வழிகாட்டுதலை வழங்கவும் இம்முறைசாரா அமைச்சர்கள் கூட்டம் எண்ணுகிறது.

**10. சமீப செய்திகளில் இடம்பெற்ற இந்தியாவின் முதல் பயணிகள் செல்லும் டிரோனின் பெயர் என்ன?**

அ. ஆகாஷ்

**ஆ. வருணா ☑**

இ. ஜடாயு

ஈ. கருடன்



- ✓ இந்தியாவின் முதல் பயணிகள் செல்லக்கூடிய டிரோனான 'வருணா', மனிதர்களை ஏற்றிக்கொண்டு 25 கிமீட்டர் வரை செல்லும் திறன்கொண்டது. அதால் 130 கிலோகிராம் எடை வரை சுமந்துசெல்லவியலும். தொடர்ச்சியாக 25–33 நிமிடங்கள் வரை இதால் பறக்கவியலும்.
- ✓ இந்தியாவின் முதல் பயணிகள் செல்லக்கூடிய டிரோனான 'வருணா'வின் செயல்விளக்கத்தை பிரதமர் மோடி அண்மையில் பார்வையிட்டார். 'வருணா' என்ற இந்த டிரோனை 'சாகர் டிபென்ஸ் எஞ்சினியரிங்' என்ற ஸ்டார்ட்–அப் நிறுவனம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியா – மொரீஷியஸ் ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு ஒப்பந்தத்தின்கீழ், இந்தியா–மொரீஷியஸ் உயர் அதிகார வர்த்தகக் குழுவின் முதலாவது அமர்வு வெற்றிகரமாக நடைபெற்றது**

இந்தியா–மொரீஷியஸ் உயரதிகார வர்த்தகக் குழுவின் முதலாவது அமர்வு புது தில்லியில் 2022 ஆகஸ்ட்.1 முதல் 3 வரை நடைபெற்றது.

2021 ஏப்.1 முதல் அமலில் உள்ள இந்தியா–மொரீஷியஸ் இடையேயான ஒருங்கிணைந்த பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஒப்பந்தத்தின் பொதுவான செயல்பாடு மற்றும் அமலாக்கம் குறித்து ஆய்வுசெய்வதற்காக உயர் நிலை கூட்டு வர்த்தகக் குழு அமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஆப்பிரிக்க நாடு ஒன்றுடன் இந்தியா கையெழுத்திட்டுள்ள முதலாவது ஒப்பந்தமாகும்.

இருநாடுகளுக்கும் இடையே 2019–20இல் $690.02 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இருதரப்பு வர்த்தகம், 2021–22இல் $786.72 மில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்திருப்பதற்கு இந்தக் கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பரஸ்பர சுங்க நிர்வாக உதவி ஒப்பந்தம் செய்து கொள்ள இருதரப்பிலும் விருப்பம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விரைவில் விவாதத்தை தொடங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அடுத்த அமர்வை 2023இல் நடத்துவதற்கு இருதரப்பும் முடிவு செய்துள்ளது.

---

**2. பருவநிலை மாற்றம்: மேம்படுத்தப்பட்ட பங்களிப்புக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

பருவநிலை மாற்ற இலக்கை அடைய தேசிய அளவிலான மேம்படுத்தப்பட்ட பங்களிப்புக்கு (NDC) நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. கடந்த ஆண்டு நவம்பரில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டில், பிரதமர் மோடி அறிவித்த 5 அம்சக்கொள்கைகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

மேம்படுத்தப்பட்ட NDC–இன்கீழ், கரியமில வாயு வெளியேற்றத்தை வரும் 2030–க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45 சதவீதம் குறைக்க நடுவணரசு முடிவு செய்துள்ளது. மேலும், புதைபடிவமற்ற எரிசக்தி ஆதாரத்தின் வாயிலாக வரும் 2030–க்குள் 50 சதவீதம் கூட்டு மின்சக்தியைப் பெறவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச வெப்பநிலை அதிகரிப்பை தொழிற்புரட்சிக்கு முந்தைய அளவான 2 டிகிரி செல்சியஸுக்கு குறைவாக கொண்டு வருவதை இலக்காக கொண்டு ஒரு நாடு வகுக்கும் திட்டம் அல்லது வியூகமே தேசிய அளவிலான மேம்படுத்தப்பட்ட பங்களிப்பு (NDC) ஆகும். இதற்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐநா பருவநிலை மாற்ற மாநாட்டில், இந்தியாவின் புதைபடிவமற்ற எரிசக்தி திறன் வரும் 2030க்குள் 500 GW திறனை எட்டும் என பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

---

**1. UNESCOஇன் முக்கியமான அழிந்துவரும் பாரம்பரியக் கூர்நோக்ககங்களின் பட்டியலில், கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் வானியல் ஆய்வுக்கூடம் சேர்க்கப்பட்டுள்ளது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. பீகார் ☑**

இ. மேற்கு வங்கம்

ஈ. கேரளா

✓ முசாபர்பூரில் உள்ள LS கல்லூரியில் உள்ள வானியல் ஆய்வுக்கூடம் UNESCO–இன் உலகின் முக்கியமான அழிந்துவரும் பாரம்பரியக் கூர்நோக்ககங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. கடந்த 1916ஆம் ஆண்டில் இந்த வானியல் ஆய்வகம் உருவாக்கப்பட்டது. பல பத்தாண்டுகளாக செயல்பட்டு வந்த இந்த வானியல் ஆய்வகத்தில், கடந்த 1995இல் சில வானியல் உபகரணங்கள் காணாமல் போனதைத் தொடர்ந்து அது மூடி முத்திரையிடப்பட்டது.

**2. IT மற்றும் ITeS தொழில்நுட்ப பூங்காவை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கீழ்க்காணும் எந்த மாநிலமும் லார்சன் & டூப்ரோவும் கையெழுத்திட்டன?**

அ. தமிழ்நாடு

**ஆ. குஜராத் ☑**

இ. கர்நாடகா

ஈ. மகாராஷ்டிரா

✓ வதோதராவில் IT மற்றும் IT அடிப்படையிலான சேவைகளளிக்கும் (ITeS) தொழில்நுட்ப பூங்காவை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் லார்சன் & டூப்ரோவும் குஜராத் மாநில அரசாங்கமும் கையெழுத்திட்டன. ₹7,000 கோடி முதலீட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் L&T இந்த IT பூங்காவை உருவாக்கும். இது ஓர் ஆண்டில் 2,000 பொறியாளர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் பணி வழங்கும்; மேலும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10,000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளையும் அது உருவாக்கும்.

**3. உலகின் மிகப்பெரிய மிதவை சூரிய மின்னுற்பத்தி நிலையம் கட்டப்படவுள்ள மாநிலம் எது?**



அ. இராஜஸ்தான்

**ஆ. மத்திய பிரதேசம் ☑**

இ. குஜராத்

ஈ. பீகார்

✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் அண்மைய அறிவிப்பின்படி, உலகின் மிகப்பெரிய மிதவை சூரிய மின் உற்பத்தி நிலையமானது மத்திய பிரதேச மாநிலத்தின் கந்துவாவில் கட்டப்படவுள்ளது. இந்த ஆலை 2022–23ஆம் ஆண்டிற்குள் 600 MW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மதிப்பீடு ₹3000 கோடிக்கும் மேல் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சூரிய மின் உற்பத்தித் திட்டம் தெலுங்கானாவில் உள்ள இராமகுண்டத்தில் NTPC–ஆல் இயக்கப்பட்டு வருகிறது.

**4. வருமான வரித்துறையின் TIN 2.0 தளத்தில், முதன்முறையாக எந்த வங்கியின் கொடுப்பனவு நுழைவு வாயில் (payment gateway) இடம்பெற்றுள்ளது?**

அ. பாரத வங்கி

**ஆ. பெடரல் வங்கி ☑**

இ. பஞ்சாப் தேசிய வங்கி

ஈ. ஆக்சிஸ் வங்கி

✓ பெடரல் வங்கியானது வருமான வரித்துறையின் TIN 2.0 தளத்தில் அதன் கொடுப்பனவு நுழைவாயில் பட்டியலிட்ட இந்தியாவின் முதல் வங்கியாக மாறியுள்ளது. கடன்/பற்றட்டை, UPI, NEFT/RTGS மற்றும் இணையவழி வங்கிச்

சேவை முறைமை போன்ற முறைகளைப் பயன்படுத்தி வரி செலுத்துவோர் பணஞ்செலுத்துவதற்கு இந்தக் கொடுப்பனவு நுழைவாயில் உதவுகிறது.

**5. 2022ஆம் ஆண்டிற்கான ஐநா பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவிற்கு தலைமை வகிக்கிற நாடு எது?**

அ. சீனா

ஆ. இரஷ்யா

**இ. இந்தியா ☑**

ஈ. கஜகஸ்தான்

✓ அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட 15 நாடுகளைக் கொண்ட ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தூதரக அதிகாரிகள் பங்கேற்கும், தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான சிறப்புக் கூட்டத்தை இந்தியா நடத்தவுள்ளது. இது அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது. ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரமற்ற உறுப்பினராக இந்தியா இரண்டாண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அக்கவுன்சிலில் இந்தியாவின் பதவிக்காலம் இந்த ஆண்டு டிசம்பரில் முடிவடைகிறது. 2022ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாத எதிர்ப்பு குழுவின் தலைவராக இந்தியா உள்ளது.

**6. இந்தியாவில், 'தேசிய ஒலிபரப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ. ஜூலை.23 ☑**

ஆ. ஆகஸ்ட்.23

இ. செப்டம்பர்.23

ஈ. அக்டோபர்.23




✓ தேசிய ஒலிபரப்பு நாள் என்பது இந்தியாவில் ஜூலை.23 அன்று அனுசரிக்கப்படும் வருடாந்திர நிகழ்வாகும்; இது நம் வாழ்வில் வானொலியின் தாக்கத்தை நினைவூட்டுகிறது. இந்தியாவின் அதிகாரப்பூர்வ ஒலிபரப்பு நிறுவனமான 'பிரசார் பாரதி'யில் அகில இந்திய வானொலியும் (AIR) தூர்தர்ஷனும் அடங்கும். ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப் -பட்ட இந்தியன் பிராட்காஸ்டிங் கம்பெனி லிட் (IBC) கடந்த 1936ஆம் ஆண்டில் அகில இந்திய வானொலியாக (AIR) மாற்றப்பட்டது.

**7. NITI ஆயோக்கின் சமீபத்திய அறிக்கையின்படி R&D (GERD)–க்கான இந்தியாவின் மொத்தச் செலவினம் என்ன?**

**அ. $43/ நபர் ☑**

ஆ. $83/ நபர்

இ. $123/ நபர்

ஈ. $183/ நபர்

✓ NITI ஆயோக்கின் இந்திய புத்தாக்க குறியீடு – 2021–இன்படி, ஆராய்ச்சி & மேம்பாட்டிற்கான (R&D) இந்தியாவின் மொத்தச் செலவினம் உலகிலேயே மிகக்குறைவானவற்றுள் ஒன்றாகும். அது $43/ தனிநபர் என்றளவில் உள்ளது. இந்தியா இந்தச் செலவினத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் குறைந்தபட்சம் ரஷ்யா ($285) மற்றும் பிரேசில் ($173) போன்ற BRICS அல்லது ஆசியான் நாடுகளுக்கு இணையாக இருக்க வேண்டும் என்று இந்தக் குறியீட்டில் கூறப்பட்டுள்ளது. இந்திய அரசு R&D–க்கு 55%–க்கும் மேல் செலவு செய்கிறது.

**8. சமீபத்தில் வெளியிடப்பட்ட, 'E–AMRIT செயலியுடன் தொடர்புடைய துறை எது?**

அ. மின்–வாகனப் போக்குவரவு ☑ ஆ. விளையாட்டு

இ. தினை சாகுபடி ஈ. பெண்கள் அதிகாரமளித்தல்

✓ NITI ஆயோக் ஆனது ஐக்கிய இராஜ்ஜியத்துடன் இணைந்து மின்–வாகனப் போக்குவரவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த e–AMRIT (Accelerated e–Mobility Revolution for India's Transportation) செயலியை அறிமுகப்படுத்தியது. இந்தியாவில் அதிநவீன வேதியியல் மின்கல மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி சந்தை பற்றிய அறிக்கையையும் இது வெளியிட்டது. மின்–வாகனங்கள், மின்னேற்ற உட்கட்டமைப்பு மற்றும் மின்கல சேமிப்பு ஆகிய துறைகளில் NITI ஆயோக் இங்கிலாந்து அரசாங்கத்துடன் கூட்டிணைந்து செயல்பட்டு வருகிறது.

**9. இந்தியா, எந்த உலகளாவிய குழுவுடன் இணைந்து, 'நாடுகடந்த குற்றங்கள் குறித்த கூட்டத்தை' நடத்தியது?**

அ. பிம்ஸ்டெக்

ஆ. பிரிக்ஸ்

**இ. ஆசியான் ☑**

ஈ. ஜி–20

✓ நாடுகடந்த குற்றங்கள் தொடர்பான 9ஆவது ஆசியான்–இந்திய மூத்த அதிகாரிகள் கூட்டம் அமையில் மெய்நிகர் முறையில் நடைபெற்றது. நாடுகடந்த குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஆசியான்–இந்தியா வேலைத் திட்டத்தின் கட்டமைப்பின்கீழ் ஒத்துழைப்பை மேம்படுத்துதற்கான வழிகள் குறித்து இருதரப்பினரும் விவாதித்தனர். நாடுகடந்த குற்றங்கள் குறித்த 10ஆவது ஆசியான்–இந்தியா SOMTC ஆலோசனைக் கூட்டம் இந்தோனேசியாவில் 2023–இல் நடைபெறும்.

**10. சமீப செய்திகளில் இடம்பெற்ற Monitoring App for Seamless Inspection (MASI) உடன் தொடர்புடையது எது?**

அ. நலப்பராமரிப்பு நிறுவனங்களைக் கண்காணித்தல்

**ஆ. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களைக் கண்காணித்தல் ☑**

இ. விளையாட்டு நிறுவனங்களில் ஆய்வு

ஈ. கல்வி நிறுவனங்களில் ஆய்வு

✓ கடந்த 2014ஆம் ஆண்டு முதல் 2,000 குழந்தைகள் சிறப்பு தத்தெடுப்பு/காப்பு நிறுவனங்களில் இறந்துள்ளனர் என்று மக்களவையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானி பதிலளித்தார். கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 27,085 குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது (NCPCR) ஒரு செயலியை உருவாக்கியுள்ளது. அது குழந்தை பராமரிப்பு நிறுவனங்களைக் கண்காணிக்கும் 'Monitoring App for Seamless Inspection (MASI)' என்ற செயலியாகும்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத எதிர்ப்பு கூட்டம்

ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் உறுப்புநாடுகள் பங்கேற்கும் பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டத்தை அக்.29ஆம் தேதி இந்தியா நடத்தவுள்ளது. அந்தக் கூட்டத்தில் அமெரிக்கா, ரஷியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் 5 நிரந்தர உறுப்புநாடுகளும், 10 நிரந்தரமற்ற உறுப்புநாடுகளும் உள்ளன. நிரந்தரமற்ற உறுப்புநாடாகக் கடந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியா பொறுப்பேற்றுக் கொண்டது. இந்தியாவின் பதவிக்காலம் டிசம்பர் மாதத்துடன் நிறைவடைய உள்ள நிலையில், பயங்கரவாதத்துக்கு எதிரான ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் சிறப்பு கூட்டத்தை நடத்தவுள்ளது.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவுடைய நடப்பாண்டுக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்து வருகிறது. அக்குழுவின் சார்பிலேயே சிறப்பு கூட்டம் நடத்தப்படவுள்ளது. அக்டோபர்.29–ஆம் தேதி

நடக்கவுள்ள அக்கூட்டத்தில் ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்புநாடுகளான அமெரிக்கா, ரஷியா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், அல்பேனியா, பிரேஸில், கேபன், கானா, ஐயர்லாந்து, கென்யா, மெக்ஸிகோ, நார்வே, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள உள்ளனர்.

நவீன தொழில்நுட்பங்கள் அதீத வளர்ச்சிகண்டு வரும் நிலையில், அவற்றை பயங்கரவாத குழுக்கள் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பது தொடர்பாகக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக அதிகாரபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு நவீன தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும் விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐநாவுக்கான இந்தியத்தூதர் ருசிரா கம்போஜ், சிறப்பு கூட்டத்துக்குத் தலைமையேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத எதிர்ப்புக் குழு நடத்தும் சிறப்புக் கூட்டம் பெரும்பாலும் அமெரிக்காவின் நியூயார்க்கிலேயே நடைபெறும். ஆனால், நடப்பாண்டில் அக்கூட்டம் இந்தியாவில் நடைபெறவுள்ளது. அமெரிக்காவுக்கு வெளியே சிறப்புக் கூட்டம் நடைபெறுவது இது 7–ஆவது முறையாகும்.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பைக் கடந்த ஆண்டு ஆகஸ்டில் இந்தியா ஏற்றிருந்தது. நடப்பாண்டு டிசம்பரிலும் அப்பொறுப்பை இந்தியா மீண்டும் ஏற்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**2. குரங்கு அம்மை தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள்**

நாட்டில் குரங்கு அம்மை பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், இந்நோய் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது? என்ற வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய பட்டியலை நடுவண் சுகாதார அமைச்சகம் வெளியிட்டது.

குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்ட நபருடன் அடிக்கடி அல்லது நீண்ட தொடர்பில் இருந்தால் யாருக்கும் வேண்டுமானாலும் இந்நோய் தொற்றக்கூடும்; நோயாளியின் சுவாச துளிகள், கொப்பளங்களில் இருந்து வடியும் நீர் என நேரடியாகவோ அல்லது அவர்களது துணிகள்மூலம் மறைமுகமாகவோ இந்நோய் பரவும் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**செய்ய வேண்டியவை என்ன?**

குரங்கு அம்மை பரவாமல் தடுக்க, பாதிக்கப்பட்ட நபரை மற்றவர்களிடமிருந்து முதலில் தனிமைப்படுத்த வேண்டும். சுத்திகரிப்பான் அல்லது சோப்புகள்மூலம் கைகளை கழுவுவதுடன், நோயாளிக்கு அருகில் செல்லும்போது முகக் கவசமும் கையுறையும் அணிவது அவசியம். கிருமிக்கொல்லிகளை பயன்படுத்தி சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்த வேண்டும்.

**செய்யக்கூடாதவை என்ன?**

குரங்கு அம்மை நோயாளிகளின் உடைகள், படுக்கை விரிப்புகள், துண்டுகள் உள்ளிட்டவற்றை வேறு யாருடனும் பகிரக்கூடாது. நோயாளிகளின் துணிகளை நோய் பாதிப்பு இல்லாத நபர்களின் துணிகளுடன் சேர்த்து துவைக்கக் கூடாது. குரங்கம்மை அறிகுறிகள் இருப்பதாக தோன்றினால், பொது நிகழ்ச்சிகளுக்கு செல்வதை தவிர்க்கவேண்டும். குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அறிகுறிகள் உள்ளவர்களை புறக்கணித்து, களங்கப்படுத்தக் கூடாது.

**21 நாள்கள் கண்காணிப்பு:**

குரங்கம்மையால் பாதிக்கப்பட்ட அல்லது நோய் பாதிப்பு சாத்தியமுள்ள நபருடன் நெருங்கிய, உடல்ரீதியான தொடர்பிலிருந்தவர்கள் 21 நாள்களுக்கு கண்காணிக்கப்படவேண்டும். அவர்களுக்கு அறிகுறிகள் இல்லாவிட்டாலும் இரத்த தானமோ, செல், திசு, உடல் உறுப்பு, உயிரணு தானமோ செய்யக்கூடாது.

**அறிகுறிகள் என்னென்ன?**

காய்ச்சல், அரிப்பு, நிணநீர் முடிச்சுகள் வீக்கம்போன்ற அறிகுறிகளுடன் குரங்கு அம்மை பாதிப்பு தொடங்கும். காய்ச்சல் ஆரம்பித்ததில் இருந்து 3 நாள்களுக்குள் வலியுடன் கூடிய கொப்பளங்கள் ஏற்படும். 2 முதல் 4 வாரங்களுக்கு பின் குணமாகும் காலம் தொடங்கும். 4 வாரங்களுக்குள் தானாகவோ சரியாகும் நோயாக இது பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில், குரங்கு அம்மையால் ஏற்படும் இறப்பு விகிதம் 3 முதல் 6 சதவீதமாக உள்ளது என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கரோனாவைத் தொடர்ந்து, உலக நாடுகளை அச்சுறுத்தும் நோயாக குரங்கு அம்மை மாறியுள்ளது. விலங்குகளிடம் இருந்து மனிதனுக்கு பரவிய குரங்கு அம்மை பாதிப்பை, சர்வதேச சுகாதார நெருக்கடியாக உலக சுகாதார நிறுவனம் அண்மையில் அறிவித்தது.

**1. 'யுத் அபியாஸ்' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் இராணுவப்பயிற்சியாகும்?**



அ. ஜப்பான்

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. பிரான்ஸ்

✓ இந்தியாவும் அமெரிக்காவும் வரும் அக்டோபர் மாதத்தில் உத்தரகாண்டின் ஔலியில், 'யுத் அபியாஸ்' என்ற பெயரில் 15 நாட்கள் நீடிக்கும் பிரம்மாண்ட இராணுவப் பயிற்சியை நடத்தும். அப்பயிற்சியின் 18ஆவது பதிப்பு பல சிக்கலான பயிற்சிகளை உள்ளடக்கியதாக திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின் கடைசிப்பதிப்பு கடந்த 2021 அக்டோபரில் அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்றது. கடந்த 2016 ஜூனில், அமெரிக்கா இந்தியாவை, 'முதன்மை பாதுகாப்பு பங்காளர்' என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

**2. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட லேசர்–வழிகாட்டப்பட்ட ATGM–களை சோதனை செய்த அமைப்பு எது?**

அ. HAL

**ஆ. DRDO ☑**

இ. BEL

ஈ. BHEL

✓ இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பும் (DRDO) இந்திய ராணுவமும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட லேசர்–வழிகாட்டப்பட்ட பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுகணைகளை (ATGM) சமீபத்தில் சோதனை செய்தன. இது மகாராஷ்டிராவில் உள்ள கவசப்படை மையம் மற்றும் பள்ளியின் ஆதரவுடன் KK தளத்தில் உள்ள முதன்மை போர் பீரங்கியான அர்ஜுனிலிருந்து சோதனை செய்யப்பட்டது.

**3. 75 கிராமப்புறப் பள்ளிகளைச் சேர்ந்த 750 மாணவிகளால் உருவாக்கப்பட்ட, இஸ்ரோவால் ஏவப்படவுள்ள செயற்கைக்கோளின் பெயர் என்ன?**

அ. பாரத்சாட்

**ஆ. ஆசாதிசாட் ☑**

இ. கிராம்சாட்

ஈ. கம்யூனிசாட்

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து சிறு செயற்கைக்கோள் ஏவுகலத்தை விண்ணில் செலுத்தவுள்ளது. இது இஸ்ரோவால் தயாரிக்கப்பட்ட சிறு மற்றும் எடைகுறைந்த வணிக ஏவுகலம் ஆகும்.

✓ 75ஆவது விடுதலை ஆண்டைக்குறிக்கும் வகையில் விண்வெளியில் பறக்கவிடப்படும் இந்திய நாட்டின் மூவர்ணக் கொடியையும் அந்த ஏவுகலம் சுமந்துசெல்லும். இந்த ஏவுகலம் EOS–02 என்ற உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் மற்றும் கியூப்சாட் ஆசாதிசாட் ஆகியவற்றைக் கொண்டுசெல்லும்; இது, இந்தியாவின் கிராமப்புறங்களில் உள்ள 75 பள்ளிகளைச் சேர்ந்த 750 பள்ளி மாணவிகளால் உருவாக்கப்பட்டது. இந்தச் செயற்கைக்கோளில் தேசிய கீதத்துடன் ஒரு சிறப்புப் பாடலும் இடம்பெற்றிருக்கும்.

**4. 2022 – ஆகஸ்ட் பணவியல் கொள்கைக்குழு கூட்டத்திற்குப் பிறகு ரெப்போ விகிதம் என்ன?**

அ. 5.0 % ஆ. 5.2 %

**இ. 5.4 % ☑** ஈ. 5.75 %

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையிலான பணவியல் கொள்கைக்குழு ரெப்போ விகிதத்தை 50 அடிப்படை புள்ளிகள் உயர்த்தி 5.40 சதவீதமாக உயர்த்தியது. தொடர்ந்து அதிகரித்து வரும் பண வீக்கத்தை கட்டுப்படுத்த இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இம்முடிவிற்குப்பிறகு, ரெப்போ விகிதம் தொற்றுநோய்க்கு முந்தைய காலகட்டத்தில் இருந்த 5.15 சதவீதத்திற்கு மேல் உள்ளது. மூன்று தொடர்ச்சியான பணவியல் கொள்கை கூட்டங்களில் ரெப்போவின் ஒட்டுமொத்த உயர்வு 140 அடிப்படை புள்ளிகளுக்குச் சென்றுள்ளது.

**5. தைவானைச் சுற்றி மிகப்பெரிய இராணுவப் பயிற்சிகளை நடத்திய நாடு எது?**

**அ. சீனா ☑**



ஆ. இரஷ்யா

இ. இந்தியா

ஈ. கஜகஸ்தான்

✓ தைவானைச்சுற்றி சீனா மிகப்பெரிய ராணுவப்பயிற்சியைத் தொடங்கியுள்ளது. அப்போது சீனாவால் எறிகணைகள் ஏவப்பட்டது மற்றும் போர் விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்கள் நிலைநிறுத்தப்பட்டன. அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் தைவான் பயணத்திற்குப் பதிலடியாக இது நடத்தப்பட்டது. தைவானுக்குச் சென்ற முதல் அமெரிக்க உயரதிகாரி பெலோசி ஆவார். இந்தப் பயிற்சிகள் அதன் விமான தகவல் பகுதி வழியாகச் செல்லும் 18 பன்னாட்டு வழித்தடங்களை சீர்குலைக்கும் என்று தைவான் அமைச்சரவை கூறியது.

**6. IUCN ஆனது எவ்வகை பட்டாம்பூச்சிகளை, 'அழிந்துவரும் உயிரினங்கள் பட்டியலில்' சேர்த்துள்ளது?**

**அ. அரச வண்ணத்துப்பூச்சி ☑**



ஆ. மயில் வண்ணத்துப்பூச்சி

இ. சிவப்பு அதிகாரி வண்ணத்துப்பூச்சி

ஈ. நீலன்கள் வண்ணத்துப்பூச்சி

✓ நாடோடி இனமான 'அரச வண்ணத்துப்பூச்சி'யை, இயற்கைப் பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியம் 'அழிந்துவரும் உயிரினங்கள்' பிரிவில் பட்டியலிட்டுள்ளது. IUCN ஆனது அரச வண்ணத்துப்பூச்சியின் கிளையினத்தை (*Danaus plexippus*) அழிந்துவரும் நிலையில் சேர்த்துள்ளது; அது அக்கிளையினங்கள் காடுகளில் அழிந்துபோகும் அபாயத்தை எதிர்கொள்வதைக் குறிக்கிறது. வாழ்விட இழப்பு, பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி பயன்பாடு மற்றும் கால நிலைமாற்றம் ஆகியவை அவ்வண்ணத்துப்பூச்சியின் அழிவுக்கு முதன்மை அச்சுறுத்தல்களாக உள்ளன.

**7. இந்தியாவில் வருமான வரி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ. ஜூலை.24 ☑**

ஆ. ஆகஸ்ட்.24

இ. செப்டம்பர்.24

ஈ. ஜனவரி.24

✓ நாட்டில் வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவுகூரும் வகையில், வருமான வரித்துறை ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.24ஆம் தேதியை வருமான வரி நாளை அனுசரிக்கிறது. 1857ஆம் ஆண்டு விடுதலைப் போரின் போது ஆங்கிலேய ஆட்சியால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட, 1860ஆம் ஆண்டு இதே நாளில், சர் ஜேம்ஸ் வில்சன் இந்தியாவில் முதன்முறையாக வருமான வரியை அறிமுகப்படுத்தினார். இந்தியாவில் வருமான வரி விதித்து 150 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையில் கடந்த 2010ஆம் ஆண்டு முதன்முறையாக வருமான வரி நாள் கொண்டாடப்பட்டது.

**8. 'முதலாவது கேலோ இந்திய பெண்கள் வாள்சண்டை லீக்' நடைபெறும் இடம் எது?**



அ. சென்னை **ஆ. புது தில்லி ☑**

இ. குவாலியர் ஈ. பாட்னா

✓ முதலாவது கேலோ இந்திய பெண்கள் வாள்சண்டை லீக் சமீபத்தில் புது தில்லியின் தல்கடோரா உள்விளையாட்டு அரங்கில் தொடங்கியது. பெண்களுக்கான தேசிய அளவிலான வாள்வீச்சுப் போட்டி இதுவே முதல்முறையாகும். 20 மாநிலங்களின் 300–க்கும் மேற்பட்ட பெண்கள் இந்நிகழ்வில் பங்கேற்கின்றனர். டோக்கியோ ஒலிம்பியன் மற்றும் இலக்கு ஒலிம்பிக் போடியம் திட்டம் (TOPS) தடகள வீராங்கனை பவானி தேவியும் இதில் பங்கேற்கிறார்.

**9. அண்மையில், பிரத்யேக, 'சுற்றுலாக் கொள்கை – 2021'ஐ அறிமுகப்படுத்திய இந்திய மாநிலம் எது?**

அ. தமிழ்நாடு

**ஆ. ஜார்கண்ட் ☑**



இ. சிக்கிம்

ஈ. அஸ்ஸாம்

✓ ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், 'ஜார்கண்ட் சுற்றுலாக்கொள்கை–2021'ஐ வெளியிட்டார். இக்கொள்கையானது மாநிலத்தின் சுற்றுலாத்துறையை புத்துயிர் மற்றும் மறுசீரமைப்பு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 'ஜார்கண்ட் சுற்றுலாக்கொள்கை 2021' ஆனது ஜார்க்கண்ட் அரசாங்கத்துடன் கூட்டாக இணைந்து FICCIஆல் ஏற்பாடு செய்யப்பட்டது. இது, 2025ஆம் ஆண்டுக்குள் மிகவும் விரும்பப்படும் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக ஜார்கண்ட் மாநிலத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**10. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் இந்தியக் குழுவை உற்சாகப்படுத்த, 'கிரியேட் ஃபார் இந்தியா' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

**அ. இந்திய விளையாட்டு ஆணையம் ☑**

ஆ. தேசிய விளையாட்டு பல்கலைக்கழகம்

இ. இந்திய இராணுவ விளையாட்டு நிறுவனம்

ஈ. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்

SAI
SPORTS AUTHORITY OF INDIA

✓ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் இந்தியக் குழுவை உற்சாகப்படுத்த, 'இந்தியாவுக்காக உருவாக்கு' என்ற பிரச்சாரத்துடன் இந்திய விளையாட்டு ஆணையம் புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது. பர்மிங்காமில் நடைபெறும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் 16 பிரிவுகளில் 215 பேர்கொண்ட இந்திய தடகளப் பிரிவு பங்கேற்க உள்ளது. அந்தப் பங்கேற்பாளர்கள் #create4India மற்றும் #cheer4India என்ற ஹேஷ்டேக்குகளைப் பயன்படுத்தி உள்ளீடுகளைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வட்டி விகிதத்தை 0.5% உயர்த்தியது ஆர்பிஐ**

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தை (ரெப்போ விகிதம்) இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 0.5% உயர்த்தியுள்ளது. அதன்காரணமாக, வீட்டுக்கடன், வாகனக்கடன், மாதாந்திர தவணைத் தொகை உள்ளிட்டவற்றுக்கான வட்டியை வங்கிகள் உயர்த்தவுள்ளன.

நாட்டில் பணவீக்கம் 2 முதல் 6 சதவீதத்துக்குள் இருக்க வேண்டுமென RBI இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால், கடந்த ஜனவரி மாதம் முதலே பணவீக்கம் 6 சதவீதத்துக்கு அதிகமாக உள்ளது. அதைக் கட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் ரெப்போ வட்டி விகிதம் ஏற்கெனவே கடந்த மே மாதம் முதல் 0.9 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**1.4 சதவீதம் உயர்வு:**

வட்டி விகிதத்தை உயர்த்துவதற்கு நிதிக் கொள்கை குழுவின் ஆறு உறுப்பினர்களும் ஒருமனதாக ஆதரவு தெரிவித்தனர். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடந்த மே மாதத்தில் இருந்து ரெப்போ வட்டி விகிதம் 1.4 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

**பணவீக்கம்:**

பணவீக்கமானது நடப்பு 2022–23–ஆம் நிதியாண்டில் 6.7 சதவீதமாக இருக்கும் என RBI கணித்துள்ளது. நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் பணவீக்கம் 7.1 சதவீதமாகவும், மூன்றாவது காலாண்டில் 6.4 சதவீதமாகவும் இருக்கும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார வளர்ச்சி:**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) நடப்பு நிதியாண்டில் 7.2 சதவீதமாக இருக்கும் என்று RBI தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் GDP வளர்ச்சி 16.2 சதவீதமாகவும், இரண்டாவது காலாண்டில் 6.2 சதவீதமாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. RBI நிதிக் கொள்கை குழுவின் அடுத்த கூட்டம் செப்.28 முதல் 30–ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. குடியரசுத்துணைத்தலைவராக ஜகதீப் தன்கர் தேர்வு**

குடியரசுத்துணைத்தலைவர் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் ஜகதீப் தன்கர் (71) வெற்றி பெற்றார். அவர் நாட்டின் 14–ஆவது குடியரசு துணைத்தலைவராக ஆக.11 அன்று பதவியேற்பார்.

இந்தத்தேர்தலில் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் மொத்தமுள்ள 780 எம்.பிக்களில் 725 எம்.பிக்கள் வாக்களித்தனர். இதைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மாலை 6 மணிக்கு தொடங்கியது. மக்களவையில் பாஜகவுக்கு பெரும்பான்மை உள்ள நிலையில், மாநிலங்களவையில் அக்கட்சி சார்பில் 91 எம்.பிக்கள் உள்ளனர். இதன் காரணமாக ஏற்கெனவே எதிர்பார்த்தபடி, தேர்தலில் ஜகதீப் தன்கர் வெற்றி பெற்றார். தேர்தலில் வாக்களித்த 725 எம்.பிக்களில் 528 பேர் (74.36%) ஜகதீப் தன்கருக்கும், 182 பேர் மார்கரெட் ஆல்வாவுக்கும் வாக்களித்தனர். 15 எம்.பிக்களின் வாக்குகள் செல்லாது என அறிவிக்கப்பட்டது.

கடந்த 1997–ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல்களில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் ஜகதீப் தன்கர்தான். மேலும், பைரோன் சிங் ஷெகாவத்துக்குப்பிறகு ராஜஸ்தானில் இருந்து குடியரசுத்துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது நபர் என்ற பெருமையையும் ஜகதீப் தன்கர் பெற்றார்.

---

**3. தகைசால் தமிழர் விருது: ஆர் நல்லகண்ணு தேர்வு!**

தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஆர் நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்ளைப் பெருமைப்படுத்தும் வகையில், 2021ஆம் ஆண்டு முதல் "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருது தமிழ்நாடு அரசு வழங்கிவருகிறது.

இளம் வயதிலேயே பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு, விடுதலைப் போராட்ட வீரராகத் தன் இளம் வயதைச் சிறைச் சாலையிலும், தலைமறைவு வாழ்க்கையிலும் கழித்தவரும் ஏழை எளிய மக்களுக்காகக் குரல் கொடுத்து, சமூக நல்லிணக்கத்தினையும், சுற்றுச்சூழலையும் காத்திடத் தொடர்ந்து பாடுபட்டு வருவதுடன், சிறந்த தன்னலமற்ற

அரசியல்வாதியாகவும் பணியாற்றி, தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும்பங்களிப்பை அளித்த தமிழருமான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர் நல்லகண்ணுவுக்கு 2022ஆம் ஆண்டிற்கான "தகைசால் தமிழர் விருது" வழங்க தேர்வுக் குழுவினரால் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

"தகைசால் தமிழர்" விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர் நல்லகண்ணுவுக்கு, ₹10 இலட்சத்துக்கான காசோலையும், பாராட்டுச்சான்றிதழும், வரும் சுதந்திர நாள் விழாவில் முதல்வர் மு க ஸ்டாலின் வழங்குவார். 2021ஆம் ஆண்டுக்கான "தகைசால் தமிழர்" விருது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரான N சங்கரையாவுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**4. புவி கண்காணிப்பு செயற்கைக்கோளுடன் இன்று விண்ணில் பாய்கிறது எஸ்எஸ்எல்வி ராக்கெட்**

புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோளான இஓஎஸ்-02 உடன் எஸ்எஸ்எல்வி ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (ஆக.7) விண்ணில் ஏவப்படுகிறது. சிறிய ரக செயற்கைக்கோளுக்காக வடிவமைக்கப்பட்ட, எடை குறைந்த முதலாவது ராக்கெட் திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்தொடர்பு, தொலையுணர்வு மற்றும் வழிகாட்டி செயற்கைக்கோள் திட்டங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) செயல்படுத்தி வருகிறது. அதற்காக, பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி வகை ராக்கெட்டுகள் மூலம் செயற்கைக்கோள்கள் விண்ணில் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன. இதில் பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 1,750 கிலோ வரையும், ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 4,000 கிலோ வரை எடைகொண்ட செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த முடியும்.

இந்த நிலையில், சர்வதேச விண்வெளித் துறையில் சிறிய செயற்கைக்கோள்களை ஏவுவதற்கான தேவை அதிகரித்துள்ளது. இதை கருத்தில்கொண்டு 500 கிலோ வரையிலான எடை குறைந்த செயற்கைக்கோள்களை புவியின் தாழ்வட்ட சுற்றுப்பாதைக்கு கொண்டுசெல்ல சிறியரக எஸ்எஸ்எல்வி ராக்கெட்டுகளை இஸ்ரோ புதிதாக வடிவமைத்துள்ளது. இதன் எடை அதிகபட்சம் 120 டன்.

இம்முறை அந்த வகை ராக்கெட், இஓஎஸ்-02 (மைக்ரோசாட்-2ஏ) செயற்கைக்கோளுடன் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 9.18 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது.

அதற்கான 5 மணிநேர கவுன்ட்டவுன் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு தொடங்கியது. இஓஎஸ்-02 செயற்கைக்கோளானது 145 கிலோ எடைகொண்டது. இது கடலோர நிலப்பயன்பாடு, ஒழுங்குமுறை, நகர்ப்புற, கிராமப்புற மேலாண்மை, பயன்பாடற்ற நிலங்களுக்கான எல்லை வரைபடம் தயாரிப்பு உள்ளிட்ட பணிகளுக்கு உதவியாக இருக்கும். இதில் உள்ள 2 நவீன கேமராக்கள் மூலம் 6 மீ அளவுக்கு துல்லியமாகப் படம்பிடிக்க முடியும்.

**கல்விசார் செயற்கைக்கோள்:** இதனுடன் ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின்மூலம் 'ஆசாதிசாட்' (8 கிலோ) எனும் கல்விசார் செயற்கைக்கோளும் விண்ணில் செலுத்தப்படுகிறது. இச்செயற்கைக்கோள் நாடு முழுதும் கிராமங்களில் உள்ள 75 பள்ளிகளைச் சேர்ந்த மாணவிகள் கூட்டு இணைப்பில் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**5. வேளாண் ஏற்றுமதி 31% அதிகரிப்பு: மத்திய அரசு**

இந்தியாவின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்களின் ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் 31 சதவீதம் (7408 மில்லியன் டாலர்) அதிகரித்துள்ளது என்று மத்திய அரசு வணிக நுண்ணறிவு, புள்ளியியல் தலைமை இயக்ககம் வெளியிட்ட தரவுகளின்படி, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் ஒட்டுமொத்த ஏற்றுமதி ஏப்ரல்-ஜூன் 2022இல் 7408 மில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலப்பகுதியில் இது 5663 மில்லியன் டாலர்களாக இருந்தது. ஏப்ரல்-ஜூன் 2022-23-க்கான ஏற்றுமதி இலக்கு 5890 மில்லியன் அமெரிக்க டாலர்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் எடுத்த முயற்சிகள் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மொத்த ஏற்றுமதி இலக்கில் 31 சதவீதத்தை எட்டுவதற்கு உதவியுள்ளன.

வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் தலைமை இயக்குநரகதின் தரவுகளின்படி, புதிய பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி 4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. அதேசமயம் பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதியும் 59.71 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் இறைச்சி, பால் மற்றும் கோழிப் பொருள்களின் ஏற்றுமதி 9.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. பிற தானியங்களின் ஏற்றுமதி 29 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. பிற தானியங்களின் ஏற்றுமதி ஏப்ரல்–ஜூன் 2021–இல் 237 மில்லியன் டாலரில் இருந்து ஏப்ரல்–ஜூன் 2022–இல் 306 மில்லியன் டாலராக அதிகரித்ததாக புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**6. 150 பாரம்பரிய இடங்களில் தேசியக் கொடி தொல்லியல் துறை ஏற்பாடு**

சுதந்திர தின விழாவையொட்டி ஆக.15–ஆம் தேதி 150 பாரம்பரிய சின்னங்கள், இடங்களில் தேசியக் கொடியேற்ற இந்திய தொல்லியல் துறை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து தொல்லியல் துறை அதிகாரிகள் கூறியதாவது:

சுதந்திர தின அம்ருத பெருவிழாவை முன்னிட்டு இந்திய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 150 பாரம்பரிய சின்னங்கள், இடங்களில் தேசியக்கொடி ஏற்றப்படும். பதேபூர் சிக்ரி, போர்பந்தரில் உள்ள மகாத்மா காந்தி பிறந்த இடம், லக்னௌவில் உள்ள பிரிட்டிஷார் காலத்திய குடியிருப்பு, பைஸாபாதின் குலாப்பரி, வேலூர் கோட்டை, வாரங்கல் கோட்டை, சித்ரதுர்கா, அஜந்தா எல்லோரா குகைகள் உள்ளிட்ட இடங்களில் தேசியக்கொடி ஏற்றுவதற்கான ஏற்பாடுகளை தொல்லியல் துறை மேற்கொண்டு வருகிறது. இந்த இடங்களை மூவண்ணத்தில் ஒளிரச்செய்யவும் நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் 3,693 பாரம்பரிய சின்னங்கள், இடங்கள் உள்ளன. சுதந்திர தின அம்ருத பெருவிழாவையொட்டி இந்த இடங்களில் ஆக.5 முதல் 15–ஆம் தேதி வரை பார்வையாளர்கள் இலவசமாகப் பார்வையிட மத்திய கலாசார அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

---